








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

We Are Here..!! To Guide You..!!










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 28.09.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- நியமனங்கள்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்










## தமிழக நிகழ்வுகள்

- **The Economy Time** பத்திரிக்கை, நாட்டிலேயே ஊரக பகுதிகளில் வளர்ச்சி திட்டங்கள் மற்றும் வறுமை ஒழிப்பு திட்டங்களை திறம்பட செயல்படுத்தும் மாநிலமாக **தமிழ்நாட்டை தேர்வு செய்து விருது வழங்கியுள்ளது.**

## இந்திய நிகழ்வுகள்

- பழங்குடியினரின் கைவினைப் பொருட்களான கைத்தறி மற்றும் கலைப்பொருட்களை **"பஞ்சதந்திரா தொகுப்பு" Puncha Tantra** என்ற பெயரில் தீபாவளி விற்பனைக்கு பிரபலபடுத்துவதற்காக குத்துச்சண்டை வீராங்கனை **மேரி கோம்-ஐ** விளம்பரத் தூதராக மத்திய பழங்குடியினர் விவகாரங்களுக்கான அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

- தொலைதொடர்பு துறையில் ஏற்படும் நவீன மாற்றங்களுக்கு ஏற்ப, புதிய தேசிய தொலைத் தொடர்பு கொள்கையை மத்திய அரசு உருவாக்கி உள்ளது. **"தேசிய டிஜிட்டல் தொடர்பு கொள்கை – 2018" National Digital Communication Policy-2018** என இதற்கு பெயரிடப்பட்டுள்ளது.
  - மேலும் தொலைதொடர்பு ஆணையத்தின் பெயரை டிஜிட்டல் தொடர்பு ஆணையம் என மாற்றவும் வகை செய்யப்பட்டுள்ளது.
- குறிப்பு
  - இதற்கு முன், தொலைத் தொடர்பு துறையில், **தேசிய தொலைத் தொடர்பு கொள்கை – 2012** இருந்தது குறிப்பிடத்தக்கது.

- இந்திய ஆயுதப் படைகளின் தைரியம், வீரம் மற்றும் தியாகம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் விதமாக, **செப்டம்பர் 28-30 வரை 'பாராக்ரம் பர்வ் Parakram Parv** என்னும் சிறப்பு நிகழ்ச்சி கொண்டாடப்பட உள்ளது.
  - தாக்குதல்களில் கவனம் செலுத்தும் ஆயுதப் படைகளின் வீரம் என்ற கருப்பொருளின் கீழ் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

# உலக நிகழ்வுகள்

- சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பிரிவில் இணைந்து செயல்படுவதை மேம்படுத்த **இந்தியா மற்றும் மொராக்கோ** நாடுகளுக்கிடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.
    - இந்த ஒப்பந்தம் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான ஒத்துழைப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் இதனால் சந்தை வாய்ப்புகள் அதிகரிக்கும்
- **குறிப்பு**
    - இந்த ஒப்பந்தத்தில் தேசிய சிறு தொழில்கள் கழகத்தின் நிர்வாக இயக்குநர் **ரவீந்திரநாத்தும்,** மொராக்கோ பி.எம்.இ நிறுவனத்தின் பொது இயக்குநர் **ரப்ரி பாரஸீவாவும்** கையெழுத்திட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

- உலகின் பல்வேறு அருங்காட்சியங்களில் வைக்கப்பட்டுள்ள பறவைகளின் எலும்புக்கூடுகளை ஆய்வு செய்த விஞ்ஞானிகள், உலகின் மிகப்பெரிய பறவையாக சுமார் 10 அடி உயரமும், 800 கி.கி எடையும் கொண்ட **"வொரம்பே டைட்டன்"** என்ற அழிந்துபோன பறவை இனத்தை அறிவித்துள்ளது.

# நியமனங்கள்

- நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட லோக்பால், லோக் ஆயுக்தா சட்டம் - 2013ல் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் படி தேசிய அளவில் லோக்பால் அமைப்பும் மாநில அளவில் லோக் ஆயுக்தா அமைப்புகளும் உருவாக்கப்பட வேண்டும். லோக்பால் உறுப்பினர் குழுவில் பிரதமர், மக்களவை சபாநாயகர், எதிர்கட்சி தலைவர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி உள்ளிட்டோர் இடம் பெற்றிருக்க வேண்டும்.
    - இந்நிலையில் லோக்பால் அமைப்பின் தேடுதல் குழுவின்

தலைவராக முன்னாள் நீதிபதி **ரஞ்சனா பிரகாஷ் தேசாய்** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## விருதுகள்

- மத்திய விளையாட்டுத்துறை அமைச்சகம் வழங்கும் உயரிய விருதான **'ராஷ்ட்ரிய கேல்புரோத் சாஹன் புரஸ்கா் RASHTRIYA KHEL PROTSAHAN PURUSKAR** எனும் விளையாட்டு மேம்பாடு விருது ஈஷா அவுட்ரீச்சுக்கு **Isha Outreach** வழங்கப்பட்டுள்ளது.
    - விளையாட்டு துறையில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் அமைப்புகளுக்கு மத்திய விளையாட்டு துறை அமைச்சகம் ஆண்டுதோறும் தேசிய விருதுகளை வழங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## முக்கிய தினங்கள்

- **உலக சுற்றுலா தினம் - செப்டம்பர் 27**, சுற்றுலா மற்றும் அதன் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக ஆண்டுதோறும் செப்டம்பர் 27 அன்று உலக சுற்றுலா தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.
    - முதன் முதலாக **உலகச் சுற்றுலா தினம் 1980ம்** ஆண்டு கொண்டாடப்பட்டது.
    - உலக சுற்றுலா தினம் - 2018ன் கருத்துரு – சுற்றுலா மற்றும் கலாச்சார பாதுகாப்பு **Tourism and the Digital Transformation**
- குறிப்பு
    - உலக சுற்றுலா தினம் - 2017ன் கருத்துரு – **Sustainable Tourism – a tool for development**